ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2002/72 - 2017 ජනවාරි මස 20 වැනි සිකුරාදා - 2017.01.20

*2002/72 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/1978 (X)*

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25 அ என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25 அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பிவி 62877 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஹொரைசன் கொலிஜ்ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னோலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70 இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, நிரல் I இல் காணப்படும் "தகவல் தொழில் நுட்பவியலில் கௌரவ விஞ்ஞான இளமானி" என்னும் பதிவையும் அதன் அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள அதனது நேரொத்த பதிவையும் உடனடுத்து இதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான II ஆம் அட்டவணையின் முறையே I ஆம் மற்றும் II ஆம் நிரல்களின் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளை சேர்ப்பதன்மூலம் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதிய 1975/47 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை இக்கட்டளை மூலம் திருத்துகின்றேன்.*

**அட்டவணை I**

*நிபந்தனைகள்*

*ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னோலொஜி (பிரைவேட்) லிமிட்டெட் ஆனது வலைப்பின்னல் மற்றும் செல்லிடை கணினியியலில் உள்ள தகவல் தொழில் நுட்பவியலில் விஞ்ஞான இளமானிப் பட்டம் தொடர்பில் இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாணவர்களைச் சேர்க்கின்ற போது 995 ஆம் இலக்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின்படி க.பொ.த உயர்தர பரீட்சையில் அல்லது அதற்குச் சமனான பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்திட்டத்தில் குறைந்தது நுழைவுத் தகைமைகளாக 3 சாதாரண சித்திகளை ("S") பின்பற்றுதல் வேண்டும்.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை *II***

| *"நிரல் I*<br>*பட்டங்கள்* | *நிரல் II*<br>*பட்டங்களின் சுருக்கீடுகள்* |
|---|---|
| உணவுப் பாதுகாப்பு, விலங்கு மற்றும் தாவர சுகாதாரத்தில் பட்டப்பின் திப்புளோமா | பிஜி டிப் (உணவுப் பாதுகாப்பு, விலங்கு மற்றும் தாவர சுகாதாரம்) |
| வலைப்பின்னல் மற்றும் செல்லிடை கணினியியலில் உள்ள தகவல் தொழில் நுட்பவியலில் விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி ஐரி (வலைப்பின்னல் மற்றும் செல்லிடைக் கணினியியல்) |

லக்ஸ்மன் கிரியெல்ல,
உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2017, சனவரி 19.*

*2 - 307*